

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் ஏ.உதயகுமார் (எ) பிரபு – ஆலந்தூர் வடக்கு பகுதி தி.மு.க. வழக்கறிஞர் அணி வி.சுகன்யா (எ) செல்வி ஆகியோர் திருமணம் அண்மையில் நடைபெற்றது. அமைச்சர் மா. சுப்பிரமணியன் அவர்களது இல்லம் சென்று மணமக்களை வாழ்த்தினார். உடன் பகுதி செயலாளர் ப.குணாளன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், எம்.வி. குமார், கார்த்திக் உள்ளிட்டோர் இருந்தனர்.

## நாமக்கல் மேற்கு மாவட்டம்

# தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் வேட்பு மனுத் தாக்கல்

### தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகத் தேர்தலில், தலைமைச் செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆர்.நடேசன் அவர்கள் திருச்செங்கோடு மேற்கு நகரக் கழக பொறுப்பாளராகவும் பொறுப்பு வகித்து வருகிறார். கழக சட்டதிட்ட விதிகளின்படி, 'ஒருவருக்கு ஒரு பொறுப்பு' என்ற அடிப்படையில், ஆர்.நடேசன் அவர்கள், தான் வகித்து வந்த தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டதால்;

நாமக்கல் மேற்கு மாவட்டம், **தலைமைச் செயற்குழு உறுப்பினர்** பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து **2025, ஜூன் 20 (வெள்ளிக்கிழமை) அன்று ரூ.25000/– வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.**

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/– வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 16.06.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



சென்னை வடகிழக்கு மாவட்டம் புழல் ஒன்றிய திமுக வடகரை ஊராட்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு வடகரை எம்.வெங்கடேசன், எம்.ஏ.நாகராஜ், ஏ.யோபு நாகராஜ் ஆகியோர் ஏற்பாட்டில் ஒன்றிய கழக பொறுப்பாளர் வழக்கறிஞர் ச.அற்புதராஜ் தலைமையில் சென்னை வடகிழக்கு மாவட்டம் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் எஸ்.ஏ.சீனிவாசன் 500 நபர்களுக்கு அறுசுவை உணவும் நல உதவி வழங்கினார். உடன் மு. ரமேஷ், ஜெ. முருகன், மா.மணி, யு.உதயகுமார், ஆதி.வெங்கடேசன், டி.ஜனார்த்தனம், வழக்கறிஞர் பி. கமலக்கண்ணன், பிரேம்குமார், பி. கார்த்திக், பி.மோகன், பாண்டியன், முருகன், தமிழ் மன்னன், அபிராமி, நாகராஜ், கோட்டீஸ்வரி, முரளி மற்றும் கழக உறுப்பினர்கள் உள்ளனர்.

## தஞ்சை மத்திய மாவட்டம்

# தஞ்சை தெற்கு ஒன்றியத்தில் அடங்கியுள்ள வல்லம் பேரூர் மாற்றியமைப்பு!

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் **தலைவர்** அவர்கள் அமைத்த **"தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு"** ஆலோசித்து எடுத்த முடிவின்படி, தஞ்சை மத்திய மாவட்டத்தில் ஏற்கனவே மறு சீரமைப்பு செய்து அறிவிக்கப்பட்ட தஞ்சை தெற்கு ஒன்றியத்தில் உள்ள **வல்லம் பேரூர்** தஞ்சை கிழக்கு ஒன்றியத்துடன் இணைக்கப்படுகிறது.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 16.06.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

# எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில் நடைபெறும் மேம்பாட்டுப் பணிகள்!

## இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., ஆய்வு!

*சென்னை,ஜூன்.17-*

*எழும்பூர் சட்டமன்றத் தொகுதி, வார்டு எண்.58 மற்றும் 99க்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்றுவரும் பல்வேறு கட்டுமானப் பணிகள் மற்றும் இதரப் பணிகளின் முன்னேற்றம் குறித்து கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஆய்வு மேற்கொண்டார்.*

*வார்டு 99, புரசைவாக்கம், சதாசிவம் தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 24.47 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் பல் நோக்குக் கூடம் கட்டும் பணி;*

*வார்டு 58, புரசைவாக்கம், தாக்கர் தெருவில் நிறைவடைந்துள்ள பெரிய விட்டம் கொண்ட புதிய கழிவுநீர்க் குழாய்கள் பதிக்கும் பணி;*

*வார்டு எண்.99, புரசைவாக்கம், லாடர்ஸ் கேட்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 29.82 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் பல் நோக்குக் கூடம் கட்டும் பணி;*

*மற்றும் வார்டு எண்.108, சேத்துப்பட்டு, ஷெனாய் நகர், சுப்பராயன் தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 2.03 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையம் கட்டும் பணி ஆகிய மேம்பாட்டுப் பணிகளின் முன்னேற்றம் குறித்து இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., ஆய்வு செய்தார்.*

*இவ்வாய்வின்போது பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 8, மண்டல சுகாதார அலுவலர் டாக்டர் சுதா, மண்டலம் 8, செயற் பொறியாளர் (பொறுப்பு) சுரேஷ்பாபு மற்றும் சென்னை மாநகராட்சி, சென்னைப் பெருநகரக் குடிநீர் வடிகால் வாரியம், மின்வாரியத்தைச் சேர்ந்த அதிகாரிகள் உடனிருந்தனர்.*

*மேலும், எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், 108வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன், எழும்பூர் தெற்குப் பகுதி வர்த்தகர் அணி அமைப்பாளர் ரா.வெற்றிவேல், எம்.இ.தேவநிதி, 108வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜோ.சந்தோஷ்குமார், மணிகண்டன்; எழும்பூர் தெற்குப் பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர் முத்துலெட்சுமி, வட்டத் துணைச் செயலாளர் இந்திரா காந்தி, வட்டச் செயற்குழு உறுப்பினர் வ.பாபு, பாக முகவர்கள் பா.ஆனந்த், செந்தில் மற்றும் ஆர்.வேலு, பி.டி.சி. பாலு, எம்.கணேசன், சிம்பு(எ)பிரதாப், பார்த்தசாரதி, வேலாயுதம், பாத்திமா, லதா, வள்ளி, சரளா, இருதயமேரி, நரேஷ், வெங்கடேஷ், எஸ்றா, ஐசக், யாகப், இருதயராஜ், சத்யா, ஏழுமலை, சேகர் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் செயல்வீரர்களும் உடனிருந்தனர்.*



காஞ்சிபுரம் சட்டமன்ற தொகுதி, காஞ்சிபுரம் மாநகரம், மண்டலம் – 1, வட்டங்கள் 1, 2, 10 ஆகியவற்றுக்கான மக்கள் குறை கேட்பு முகாமில், சி.வி.எம்.பி. எழிலரசன், 61 பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று , சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் தீர்வு காண பரிந்துரைத்தார். இந்நிகழ்ச்சியில், மேயர் மகாலட்சுமி யுவராஜ், மாநகரச் செயலாளர் சி. கே. வி. தமிழ்ச்செல்வன், பகுதிக் கழக செயலாளர் கே. திலகர், ஏ. எஸ். முத்துச்செல்வன், சசிகலா, ரபீக், கோமதி, லஷ்மி, பன்னீர்செல்வம், விஜய், மோகன் குமார், சுந்தர மூர்த்தி, அருள் நம்பி, காஞ்சனா, கஜலட்சுமி, சசிகலா, ஷாகுல் அமீத், ஏ. எஸ். ரவி அஸ்மா பேகம், முனைவர் செல்வம், விமலா சேகரன், சுரேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## திருநெல்வேலி மத்திய மாவட்டம்

# திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மேற்கு ஆகிய மாநகரக் கழகங்கள் பிரிப்பு திருத்தம்

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

கடந்த 30.05.2025 அன்ற 'முரசொலி'யில் வெளிவந்த திருநெல்வேலி மத்திய மாவட்டத்திற்குட்பட்ட திருநெல்வேலி கிழக்கு – திருநெல்வேலி மேற்கு ஆகிய மாநகரக் கழகங்கள் பிரிப்பு அறிக்கையில் பின்வரும் திருத்தம் மேற்கொள்ளப்படுகிறது.

தச்சநல்லூர் தெற்கு, பாளையங்கோட்டை தெற்கு, பாளையங்கோட்டை வடக்கு, மேலப்பாளையம் மேற்கு, மேலப்பாளையம் கிழக்கு ஆகிய 5 பகுதிக் கழகங்கள் அடங்கிய திருநெல்வேலி மேற்கு மாநகரம், இனி **'திருநெல்வேலி கிழக்கு மாநகரம்'** என பெயர் மாற்றப்பட்டு, ஏற்கனவே அறிவிக்கப்பட்ட இம்மாநகரப் பொறுப்பாளராக **திரு.ஏஎல்பி.தினேஷ்** அவர்களும்;

தச்சநல்லூர் வடக்கு, நெல்லை–பேட்டை கிழக்கு, நெல்லை–பேட்டை மேற்கு ஆகிய 3 பகுதிக் கழகங்கள் அடங்கிய திருநெல்வேலி கிழக்கு மாநகரம், இனி **'திருநெல்வேலி மேற்கு மாநகரம்'** என பெயர் மாற்றப்பட்டு, ஏற்கனவே அறிவிக்கப்பட்ட இம்மாநகரப் பொறுப்பாளராக **திரு.சு.சுப்பிரமணியன்** அவர்களும் தொடர்ந்து செயல்படுவார்கள்.

அதுபோலவே, பாளையங்கோட்டை வடக்கு பகுதி, இனி 'பாளையங்கோட்டை தெற்கு பகுதி'என பெயர் மாற்றப்பட்டு , ஏற்கனவே அறிவிக்கப்பட்ட இப்பகுதிக் கழகப் பொறுப்பாளராக **திரு.அ.செல்லத்துரை** அவர்களும்; பாளையங்கோட்டை தெற்கு பகுதி, இனி 'பாளையங்கோட்டை வடக்கு பகுதி'என பெயர் மாற்றப்பட்டு , ஏற்கனவே அறிவிக்கப்பட்ட இப்பகுதிக் கழகப் பொறுப்பாளராக **திரு.செய்யது முகைதீன்** அவர்களும் செயல்படுவார்கள்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட அந்தந்த பகுதிக் கழகத்திற்குட்பட்ட வார்டுகள் தொடர்ந்து அந்த பகுதிக் கழகத்திற்குட்பட்டே இயங்கும்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 16.06.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் 37 வது வட்டப் பாக நிலை (BLA.2) முகவர்கள் கூட்டம் பாக நிலை முகவர்களான ஆர்.ராஜேஷ், எஸ்.செந்தில்குமார், இ.மகாலட்சுமி, வி.ராஜேந்திரன், எம். லோகநாயகி, எம்.பாரதி, எச்.பாஸ்கரன், வி.ராஜாமணி, எஸ்.அன்பன் ஆகியோர் தலைமையிலும், வட்டக் கழகச் செயலாளர் எஸ்.மன்னா ராஜா கண்ணா, பாக ஒருங்கிணைப்பாளர் எச்.பாஸ்கரன், ராகவன், பிரீத்தி பாய், தினகரன், கண்ணன், எல்.ஆர்.சதீஷ்குமார், பழனி, நாகராஜன், க.ரமேஷ், கி.பூபதி, ம.பற்குணன், ஓ.தண்டபாணி, ஜி.ஜெகநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. இதில் மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ, தொகுதி பார்வையாளர் ரபி அகமது ஆகியோர் ஆய்வு செய்து ஆலோசனைகள் வழங்கினர். பகுதிச் செயலாளர் ஏ.கே.கருணாகரன், மகாலட்சுமி கருணாகரன் எம்.சி, தலைமை கழக இளம் பேச்சாளர் செல்வி ரூ.கீர்த்தனா ஆகியோர் கழக அரசின் சாதனைகளை விளக்கி பேசினார்கள். இதில் எம்.சார்லஸ், ஆர்.ராதா கிருஷ்ணன், சி.ஆர்.நரேஷ்குமார், ஏ.சீனிவாசன், எம்.தினேஷ், ஆர்.ஜெரில், கங்காதரன், ரவிச்சந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க

## பாகநிலை முகவர்கள் ( BLA-2 ), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் ( BDA ) ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்ட கழக செயலாளர் நிவேதா.எம்.முருகன் எம்.எல்.ஏ.அறிவிப்பு!



கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் அவர்களின் வழிக்காட்டுதலின்படி, **ஓரணியில் தமிழ்நாடு** முன்னெடுப்பின் கீழ் கழக உறுப்பினர் சேர்க்கை குறித்து மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட ஒன்றிய, நகர கழகங்களில் வாக்குசாவடி வாரியாக பாகநிலை முகவர்கள் (BLA-2 ), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (BDA ), மகளிர் அணி நிர்வாகிகள், தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம். மயிலாடுதுறை மாவட்ட கழக அவைத்தலைவர் K.G.சினிவாசன் அவர்கள் தலைமையில் மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதி பார்வையாளர் – மாநில இளைஞரணி துணை செயலாளர் திரு.**ந.இளையராஜா** ஆகியோர் முன்னிலையில் கீழ்கண்ட நிகழ்ச்சி நிரல்படி நடைபெற உள்ளது.

### மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதி

| தேதி | நேரம் | ஒன்றியம்/ நகரம் | ஊராட்சி / வார்டு – பூத் | | இடம் |
|---|---|---|---|---|---|
| 17.06.2025 | காலை 10.00 மணி | மயிலாடுதுறை நகரம் | 19,20,21,<br>22,23,24,<br>25,26,27 | 139,141,142,190,192,193,<br>194,189,188,186,145,<br>185,183,175,176,177 | மயிலாடுதுறை விஜய் மஹால் தரங்கை சாலை. |
| 17.06.2025 | பிற்பகல் 12.00 மணி | மயிலாடுதுறை நகரம் | 10,11,12,13,<br>14,15,16,<br>17,18 | 124,159,162,154,157<br>160,156,152,153,146,<br>143,144,191,140 | சங்கர பாண்டிய நாடார் திருமண மண்டம், திருமஞ்சனவீதி. |
| 18.06.2025 | காலை 10.00 மணி | மயிலாடுதுறை நகரம் | 1,2,3,4,5,<br>6,7,8,9 | 126,129,127,128,130<br>131,132,134,133,135<br>136,137,138,148,147<br>151,149,150,158,125,155 | ராஜேஸ்வரி திருமண மண்டபம் அய்யாரப்பர்வீதி |
| 18.06.2025 | பிற்பகல் 12.00 மணி | மயிலாடுதுறை நகரம் | 28,29,30,<br>31,32,33<br>34,35,36 | 161,164,167,168,163<br>165,166,170,171,169<br>172,173,174,178,181<br>182,179,180,184,187 | நாராயணி திருமண மண்டபம் திருஇந்தளூர் |
| 18.06.2025 | மாலை 5.00 மணி | மயிலாடுதுறை கிழக்கு | மன்னம்பந்தல்<br>பட்டமங்கலம்<br>மயிலாடுதுறை ரூரல்<br>நல்லத்துக்குடி<br>அகரகீரங்குடி<br>கோடங்குடி<br>செறுதியூர்<br>குளிச்சார் | 119,120,121,122,123,<br>247,248,249,250,251,252<br>253,254,256<br>255,257,258<br>259,260,<br>261,262<br>265,266 | அருண் திருமண மண்டபம் நல்லத்துகுடி |
| 19.06.2025 | காலை 10.00 மணி | மயிலாடுதுறை வடக்கு | திருச்சிற்றம்பலம்<br>முடிகண்டநல்லூர்<br>கடலங்குடி<br>பூதங்குடி<br>கேசிங்கன்<br>ஆத்தூர்<br>நமச்சிவாயப்புரம்<br>கிழாய்<br>தாழஞ்சேரி | 23,24,25,<br>21,22<br>26,27,28,29<br>30,<br>55,56<br>31,32<br>57,58<br>33,34,35,36<br>53,54 | நிலவர் திருமண மண்டபம் மணல்மேடு |
| 19.06.2025 | காலை 12.00 மணி | மயிலாடுதுறை வடக்கு | வரதம்பட்டு<br>கடக்கம்<br>சித்தமல்லி<br>குறிச்சி<br>கடுவங்குடி<br>பட்டவர்த்தி<br>இளந்தோப்பு<br>தலைஞாயிறு<br>சேத்தூர்<br>மேலாநல்லூர்<br>வில்லியநல்லூர் | 37,38,39,40,41,<br>10,<br>1,2<br>3,4,<br>7,<br>8,9,<br>5,6<br>42,43,44,45<br>46,47,<br>48,<br>49,50,51,52 | தனலெட்சுமி திருமண மண்டபம் நடராஜபுரம்,தலைஞாயிறு |
| 19.06.2025 | மாலை 4.00 மணி | மயிலாடுதுறை மேற்கு | மகாராஜபுரம்<br>மாப்படுகை<br>சோழம்பேட்டை | 101<br>195,196,197,198,199<br>200,201,202,203 | நாராயணி திருமண மஹால் மாப்படுகை |
| 19.06.2025 | மாலை 5.00 மணி | மயிலாடுதுறை மேற்கு | மூவலூர்<br>சித்தர்காடு<br>ஆணைமேலகரம்<br>மறையூர் | 238,239,240<br>241,242,243,244<br>235,236,237<br>245,246 | அய்யனார் கோயில் மூவலூர் |

மீதம் உள்ள ஒன்றிய, நகர,பேரூர் கழக கூட்டங்கள் பின்னர் அறிவிக்கப்படும்

இக்கூட்டத்திற்கு மாநில,மாவட்ட கழக நிர்வாகிகள் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், அனைத்து சார்பணி நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூராட்சி மன்ற தலைவர்கள், பாகநிலை முகவர்கள் (BLA-2 ), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (BDA )அனைவரும் அவரவர் ஒன்றிய நகரத்தில் நடைபெறும் கூட்டத்திற்கு தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**நிவேதா.எம்.முருகன் எம்.எல்.ஏ.**
மாவட்ட கழக செயலாளர்
மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க




சென்னை வடக்கு மாவட்டம்,பெரம்பூர் தெற்கு பகுதி, 44வது வட்ட திமுக கழகத்தின், பாகப் பொறுப்பாளர்கள், பாகப்பணிக் குழு உறுப்பினர்கள், பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் உள்ளடக்கிய கழக நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் 44 வது வட்ட செயலாளர் பெரம்பூர் த. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சென்னை வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் ஆர். டி.சேகர் எம்எல்ஏ, கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினார். தொகுதி பார்வையாளர் கன்னிகை ஜி. ஸ்டாலின், பகுதி செயலாளர் க. ஜெயராமன், பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா. நரேந்திரன், மாவட்ட பொருளாளர் வி. தயாளன்,மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.ஆர்.கமலகண்ணன், மாமன்ற உறுப்பினர் சர்ப ஜெயா தாஸ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.